பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 551331 ★ நிறுவியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: கார்த்திகை 13 (28—11—72) செவ்வாய் வெளியூர்: கார்த்திகை 14 (29—11—72) புதன் [இதழ்: 137

## சேலம் உருக்காலை

### 1978-ல் வேலை முடியுமாம்

புதுடில்லி, நவ. 28—

"சேலம் உருக்காலை, 1978 இறுதியில் அல்லது 1979 தொடக்கத்தில் கட்டி முடிக்கப்படும்" என்று நாடாளுமன்றத்தில் நிதித் துறை இணை அமைச்சர் கே. ஆர். கணேஷ் தெரிவித்தார்.

துணை மானியக் கோரிக்கையில் சேலம் உருக்காலை பற்றி அச்சுப் பிழை ஏற்பட்டிருக்கிறது; அதற்காக இந்த விளக்கத்தை அமைச்சர் அறிவித்தார்.

## இரயில்வேயில் 2-ம் வகுப்புகள்

### உடனடியாக ரத்து

### நாடாளுமன்றத்தில் அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 28—

"இரயில்களில் இரண்டாம் வகுப்பை உடனடியாக ரத்து செய்து விடுவது என்று இரயில்வேத் துறை முடிவு செய்துள்ளன"

என்று நாடாளுமன்ற மேலவையில் இரயில்வே துணையமைச்சர் ஷாபி குரேஷி தெரிவித்தார்.

தாயபாய் படேலின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் கூறியதாவது:—

"இரண்டாம் வகுப்பைப் படிப்படியாக ரத்து செய்வது என்று முதலில் முடிவு செய்யப்பட்டிருந்தது; ஆனால் அதை உடனடியாக ரத்துசெய்துவிடுவது என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது.

பயணிகளுக்கு அதிக இடம் கிடைக்கும் பொருட்டு இரண்டாம் வகுப்புப் பெட்டிகள் முன்றும் வகுப்புப் பெட்டிகளாக மாற்றப்படும்.

இரண்டாம் வகுப்பில் பயணம் செய்வோர் எண்ணிக்கை 6.4 சதவிகிதம்கூட இல்லை; இரண்டாவது வகுப்புப் பெட்டிகளை மூன்றாவது வகுப்புப் பெட்டிகளாக மாற்றினால், ஒவ்வொரு பெட்டியிலும் 64 பேருக்குப் பதிலாக 80 போகளுக்கு இடம் கிடைக்கும்; எனவே இரண்டாம் வகுப்புகளை ரத்துசெய்து விடுவது என்று முடிவு எடுக்கப்பட்டது."

# மணக்கும் மருக்கொழுந்தும் பளபளக்கும் ரோஜாவும்

## ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் பற்றி அன்று சொன்ன உவமை

### ஆலந்தூர் கூட்டத்தில் பேசியது என்ன?— பேராசிரியர் அன்பழகன் விளக்கம்

சென்னை, நவ. 28—

ஆலந்தூர் கூட்டத்தில் தாம் பேசியதை ஆதரித்துப் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பேசியதாக ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் இப்போது ஓர் அதிர்வேட்டைப் போட்டிருக்கிறார் அல்லவா? அது எந்த அளவுக்கு உண்மை என்பதையும், உவமைக்கு அர்த்தம் புரிந்து கொள்ளக்கூட இயலாத நிலையில் ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் இருந்து வரும் பரிதாப நிலையையும் விளக்கிப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சென்னை 117-வது வட்டத்தில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

ஆலந்தூரில் எம்.ஜி.ஆர். பேசும்போது அதே கூட்டத்தில் நானும் பேசினேன்.

அவர் பேசும்போது, 'தி. மு. கழகத்தில் பணக்காரர்கள் செல்வாக்கும் பெற்றுவிட்டார்கள்' என்று குறிப்பிட்டார்.

அவர் பேசியதைப் புரிந்து கொண்ட நான், அந்தக் கூட்டத்தில் அதற்குப் பதில் கூறும் வகையில், 'கழகம் என்பது அண்ணா தொடுத்த மாலை' என்று உருவகப்படுத்திச் சொன்னேன்.

'அந்த மாலையில் சிவந்தியும் இருக்கலாம் — மருக்கொழுந்தும் இருக்கலாம் — பளபளப்பான ரோஜாப் பூவும் இருக்கலாம் — தழைகளும் இருக்கலாம்; எல்லாம் சேர்ந்துதான் மாலை' என்று சொன்னேன்.

'பளபளப்பாக என்றால், எம். ஜி. ஆர். மாதிரி' என்று — அவரை, 'ரோஜாப் பூ' என்றேன்.

அவர் பேசும்போது 'பேராசிரியர் சொல்வதை நான் அப்படியே ஒப்புக்கொள்கிறேன்' என்று ஒப்புக்கொண்டார்.

'பணக்காரர்கள்' என்று அவர் குறிப்பிட்டதைப் பற்றி, 'மாலை மீது சுற்றப்பட்ட சரிகைகள்' என்று கூறினேன்; 'சரிகைகளுக்காக மாலையைத் தவறாகப் பார்க்கக்கூடாது' என்றும் சொன்னேன்.

அதையும் ஒப்புக்கொண்ட அவர் தம்மை ரோஜாப் பூ என்று சொன்னதையும் ஒப்புக்கொண்ட அவர் — அர்த்தம் தெரிந்துதான் அதனை ஒப்புக்கொண்டாரா என்று இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

மாலையில் உள்ள மருக்கொழுந்துகள் பார்வைக்கு அழகாக இல்லை என்றாலும் மணக்கக் கூடியவை; ஆனால், ரோஜா மாதிரி உதிர்ந்து போகக் கூடியவை அல்ல — நீண்டநாள் இருப்பவை!

இதையெல்லாம் அன்றே அவருக்கு நினைப்பூட்டிச் சொன்னதைக்கூடச் சில பத்திரிகைகள் தவறுதலாகப் போட்டிருந்தன; எம்.ஜி.ஆரை ரோஜாப் பூ என்றும், கலைஞரை நார் என்றும் நான் சொன்னதாக எழுதியிருந்தன.

'இப்படி அன்பழகன் உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறாரே' என்று பத்திரிகையாளர்கள் கலைஞரையே இதுபற்றிக் கேட்டார்கள்.

இப்படிக் கேட்டதன்மூலம் என்னைப் பற்றிக் கலைஞரிடம் தவறான எண்ணத்தைத் தோற்றுவிக்க அவர்கள் முயன்றார்களோ என்னவோ — கலைஞர் அவ்வளவு தூரம் விவரம் புரியாதவர் அல்லர்!

'ஆமாம்; நான் நார்தான்; அத்தனைப் பூக்களையும் கட்டிச் சுமக்கிறேனே' என்று தமக்கே உரிய ஆற்றலோடு பதில் சொன்னார்.

ஆனால், உதிர்ந்து போய்விடுகின்ற — நீண்டநாள் தாங்காத பளபளப்பான — அதேசமயத்தில் 'முள்ளும் இருக்கிற ரோஜாப் பூ' என்று நான் சொன்னதை அர்த்தம் புரியாமல் அப்படியே ஒப்புக்கொண்ட எம். ஜி. ஆர். எங்கே? அரசியல் இராசதந்திரியான கலைஞர் அவர்கள் எங்கே?"

## எம்.ஜி.ஆர்.—மதியழகன்

### ஆகியோருக்கு

## வாஜ்பாய் அறிவுரை

சென்னை, நவ. 27—

"தமிழ்நாடு சட்டமன்றத் தலைவர் மதியழகன், சட்டமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார்; 'அவர் இராஜிநாமா செய்ய வேண்டும்' என்று மிகப் பெரும்பான்மையான எம்.எல்.ஏ.-க்கள் கூடி கோரிக்கை விடுத்துள்ளனர்.

"சனநாயகத்திற்கு மதிப்பளித்து — சபாநாயகர் பதவியை அவர் இராஜிநாமா செய்ய வேண்டும்; சபாநாயகர் விவாதத்திற்கு உரிய மனிதராக இருக்கக் கூடாது"

என்று ஜன சங்கத் தலைவர் அதல் பிகாரி வாஜ்பாயி, இங்கு செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுச் சென்றார்,

### மக்கள் மத்தியில் ஏன் வைக்கவில்லை?

திரு. வாஜ்பாயி மேலும் கூறியதாவது:—

"தி. மு. கழக அமைச்சரவை மீது எம். ஜி. ஆர். புகார்கள் கூறியிருக்கிறார்; அந்தப் புகார்கள் என்ன என்பதை மக்கள் மத்தியில் அவர் ஏன் கூறவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

குடியரசுத் தலைவரிடம் கொடுத்த மனுவில் கூறப்பட்டுள்ள புகார்களை அவர் வெளியிட வேண்டும்.

### வலது கம்யூனிஸ்டுகள்- சந்தர்ப்பவாத அரசியல் திருவிளையாடல்காரர்கள்

எம். ஜி. ஆர். கட்சியை வலது கம்யூனிஸ்டுக் கட்சியினர் ஆதரித்து வருகிறார்கள்; எம். ஜி. ஆரின் செல்வாக்கைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முனைந்திருக்கிறார்கள்; சந்தர்ப்பவாத அரசியல் திருவிளையாடல்களில் அவர்கள் சிறந்து விளங்குபவர்களாவர்!

### புரட்சியாருக்கு அறிவுரை

மக்களின் கருத்தைத் திரட்ட திரு. இராமச்சந்திரனுக்கு உரிமை உண்டு; ஆனால், சட்டம் — ஒழுங்கு சீர்குலையாதவாறு இதைச் செய்ய வேண்டும்.

### சரியான ஒன்று!

மக்களவையில் மனோகரன் எழுப்பிய புகாரை அவைத் தலைவர் தமிழக அரசுக்கு அனுப்பி உண்மைத் தகவலை அறிய எடுத்துள்ள முயற்சி சரியானதாகும்."

## தி. மு. கழகத்துக்கே ஆதரவு

### முஸ்லிம் லீக் தலைவர் அறிக்கை

கொச்சி, நவ. 28—

"தமிழ்நாட்டில் தி. மு. கழகத்தில் பிளவு ஏற்பட்டிருப்பினும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தொடர்ந்து திரு. கருணாநிதி அமைச்சரவையையே ஆதரித்து வரும்"

என்று அனைத்திந்திய முஸ்லிம் லீக் தலைவர் சையத் அப்துர் ரகிமான் பாபகி தங்கல, இங்கு செய்தியாளரிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் கூறியதாவது:—

"கடந்த தேர்தலின்போது தி.மு. கழகத்துடன் செய்துகொண்ட உடன்பாட்டை மறுக்கும் நிலை எதுவும் லீக்குக்கு இல்லை; காரணம், முஸ்லிம் லீக்குக்கு எதிரான எதையும் தி. மு. கழகம் செய்திடவில்லை என்பதுதான்."

தமிழ்நாடு சட்டமன்றத்தில் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் 6 பேர் இருக்கின்றனர்.

ஏற்கனவே இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தமிழ்நாட்டுக் கிளையின் கூட்டம் கடந்த நவம்பர் 11-ம் நாளன்று திருச்சியில் நடைபெற்றபோது, கழக அரசை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது தெரிந்ததாகும்.

(2-ம் பத்தித் தொடர்ச்சி)

"சட்டமன்ற சனநாயகத்தை மதிக்க மறந்து வரம்பு மீறி நடந்துள்ள சர்ச்சைக்குரிய அவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் வீட்டுமுன், கல்லூரி மாணவர்களின் சனநாயகப் பாதுகாப்பு அணி இம்மாதம் 29-ந் தேதி காலை 9 மணியளவில் அண்ணா சதுக்கத்திலிருந்து புறப்பட்டுச் சென்று அவரது இல்லத்தின் முன் ஆர்ப்பாட்டமும் — மறியலும் நடத்துவதென்று தீர்மானித்துள்ளது.

"அவசியமானால் இந்த மறியலில் பங்கேற்றுச் சிறைசெல்லவும் — சனநாயக உரிமைகளைக் காக்கவும் தயார் என்று பல நூறு பேர் தங்கள் இசைவைத் தெரிவித்து வருகின்றனர்."

## மதியழகன் வீடு நோக்கி மாணவர் அணி

சென்னை, நவ. 28—

நாளை (புதன்கிழமை) காலை திரு. கே. ஏ. மதியழகன் இல்லத்தின் முன்பு சனநாயகப் பாதுகாப்பு அணி மாணவர்கள் மறியல் நடத்துவர்; இதுபற்றி மேற்படி அணியினர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

(1-ம் பத்தி பார்க்க)

# அண்ணா பெயரைக் களங்கப்படுத்தாதீர்

## பலாத்காரத்தைப் பால பாடமாக்கி-- வன்செயலை தொடர் கல்வியாக்காதீர்

### அராஜக அரசியல் 'தலைவர்'களுக்கு பேராசிரியர் க. அன்பழகன் எச்சரிக்கை

சென்னை, நவ. 25—

"அண்ணா அவர்கள் வன்முறையை விரும்பாதவர்; 'கத்தியைத் தீட்டாதே--புத்தியைத் தீட்டு' என்று சொன்னவர்; அவர் பெயரைக் கட்சிக்கு வைத்துக்கொண்டு நாடு முழுவதும் அராஜகம் நடத்துவதா?

"குற்றச்சாட்டு இருந்தால் பகிரங்கமாகப் பெயரைச் சொல்லிக் குற்றஞ்சாட்டுங்கள் -- நீதிமன்றத்தில் நாங்கள் சந்திக்கிறோம்; அதை விட்டுவிட்டு, பலாத்காரத்தைப் பால பாடமாக்கிக் கொண்டு -- கலவரத்தைத் தொடர் கல்வியாக்கிக்கொண்டு நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தாதீர்! அதற்கு அண்ணா பெயரைப் பயன்படுத்தாதீர்கள்!

"பலாத்காரத்தைத் தூண்டி டெல்லியைத் தலையிடச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள்; அதற்கு, வலதுசாரிகளும் மற்றவர்களும் தூபமிடுகிறார்கள்!

"ஆகவே இந்த நேரத்தில், கலைஞருக்காக அல்ல -- நாவலருக்காக அல்ல -- நாட்டுக்காகவும், தமிழுக்காகவும், அண்ணாவுக்காகவும் தியாகத்தால் வளர்ந்த கழகத்தை -- கழக அரசைக் கட்டிக்காத்திட வேண்டும்"

—என்று பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சென்னை 108-வது வட்டத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

சென்னை 108-வது வட்ட தி.மு.க. கிளை சார்பில் சி.ஐ.டி. நகரில் நடைபெற்ற கூட்டத்திற்கு திரு. ச. கு. வேலு தலைமை தாங்கினார்.

சைதை மதனகோபால், ஆ. செயராமன், சண்முகம், இரா. கிருட்டினன், கு. சுந்தரம், என். பி. அன்பானந்தம், மாரியப்பன், ஏழுமலை, சோ. அய்யாவு, சோ. கி. மூர்த்தி, பூரசோலி அடியார், சி.பி. வளவண்ணன், போலீசு கண்ணன், வை. பாலசுந்தரம், நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி. ஆகியோர் பேசினர்.

இறுதியில் அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உரையாற்றினார்; அவர் கூறியதாவது:—

"எம். ஜி. ஆர். தி. மு. கழகத்திலிருந்து விலக்கப்பட்டதற்குப் பல காரணங்கள் உண்டு; அதில் ஒரு காரணத்தை நான் சொல்கிறேன்.

நாம் மாநில சுயாட்சி கேட்டோம்; அது மத்திய அரசில் விவாதிக்கும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றது.

அந்த நேரத்தில் இவர் மதுரை மாநாட்டில் அதுபற்றிப் பேசத் தொடங்கி, 'மாநில சுயாட்சிக் கொள்கையை அழிக்க இராணுவம் வந்தால் அதனைச் சந்திக்கத் தயார்' என்று பேசினார்.

கலைஞரோ -- நாவலரோ -- நானோ அப்படிப் பேசமாட்டோம்; காரணம், இந்திய ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்காமல் மாநில சுயாட்சிக் கொள்கை மெல்ல மெல்ல மலர வேண்டும் என்று நினைப்பவர்கள் நாங்கள்!

ஆனால் அவர் பேசினார்; உடனே டில்லி அவரைப் பார்த்து, 'இராணுவத்தைச் சந்திக்க வேண்டாம்--எங்கள் வருமான வரி அதிகாரியைச் சந்தித்துப்பாருங்கள்' என்றார்கள்.

அப்படி டில்லி எடுத்த நடவடிக்கையினால்தான் அவர் தடுமாறினார்!

'நான் வருமான வரி கணக்கைக் காட்டினேன்--காட்டினேன்' என்கிறார்; அவரா காட்டினார்-- அவர்கள் காட்டச் சொன்னார்கள்—காட்டினார்!

ரூ. 18 இலட்சம் ஏன் வரி போட்டார்கள்—அந்த அளவுக்கு வருமானம் இருந்ததனால்தானே போட்டார்கள்? வருமானம் வந்தால்தானே வருமான வரி? அப்படி வருமானம் வந்திருக்கின்றபோது ஏன் ரூ. 18 இலட்சத்திற்கான வரியைக் கட்டாமல் விட்டார்?

எங்களைக் கணக்குக் கேட்கிறவரே -- அந்தப் பதினெட்டு இலட்சத்துக்கு என்ன கணக்கு?

அவர் விலகியதற்கு இன்னொரு காரணம்--அவரே ஒப்புக்கொள்கின்ற காரணமாகும்; முதலமைச்சர் மகன் முத்து திரைப்படத்தில் நடித்தார்; ஆர்வமுள்ள தோழர்கள், ஏழெட்டு மன்றங்களை ஆரம்பித்தார்கள்; அது அவருக்குப் பொறுக்கவில்லை.

'முத்துவைவிட்டுத் தன்னுடைய கலையுலக செல்வாக்கைக் கெடுக்கிறார் கலைஞர்' என்று எம். ஜி. ஆர். நினைத்துக்கொண்டு, 'கலைஞரின் செல்வாக்கைக் குலைத்துவிட வேண்டும்' என்று அரசியலுக்கு வந்திருக்கிறார்!

'மு. க. ஸ்டாலின் மேடை ஏறிப் பேசுகிறார்' என்பதற்காக நான் கோபித்துக்கொள்வதா?

தான் பெற்ற மகள் கொண்டை நிறையப் பூ வைத்துக்கொள்கிறாள் என்பதற்காகப் பொறுமைப்படுகிறவள் தாயாக இருக்க முடியுமா?"

## விடுதலை வீரர்களுக்கு உதவிப் பணம்

புதுடில்லி, நவ. 27—

"விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்காக ஆண்டுதோறும் ரூ. 15 கோடி செலவாகும்"

என்று நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் கே. சி. பந்த் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:—

"நவம்பர் 15ந் தேதி முடிய உதவிப் பணம் கேட்டு மத்திய அரசுக்கு வந்த மனுக்கள் 1,09,830 ஆகும்; இவைகளில் 80,000 மனுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன; இன்னும் நாள்தோறும் புதிய மனுக்கள் வந்தபடி இருக்கின்றன.

விடுதலைப் போராட்ட வீரர்கட்கு மாதந்தோறும் ரூ. 100 முதல் ரூ. 200 வரை உதவிப் பணம் வழங்கப்படுகிறது; இந்த வகையில் மத்திய அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 15 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லாதவர்களுக்கும் உதவிப் பணம் வழங்கப்படுவதாகச் சில புகார்கள் வந்திருக்கின்றன; அதுபற்றி விசாரணை நடந்து வருகிறது."

## தாராவி தி. மு. க.

### சென்னைக் கழகத் தோழருக்கு வரவேற்பு

பம்பாய் -- திராவிட தி. மு. க. சார்பாக 16—11—72 இரவு 8-30 மணியளவில், 'திராவிடரக'த்தில், தாராவி கிளைக் கழக அவைத் தலைவர் த. மு. பொற்கோ. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னைத் துறைமுகம் பகுதி துணைச் செயலாளர் கி. வள்ளுவனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது; செயலாளர் நெல்லைச் செழியன் வரவேற்புரை ஆற்றினார்; அபுபக்கர்சால் அண்ணா படிப்பகச் செயலாளர் கனி, கல்யாணிவாடி அண்ணா நினைவு மன்றத் தோழர் இராமலிங்கம், காந்திச்சாலை தோழர் நடிகர் செல்லையா, இலக்குமிசால் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் செயலாளர் எஸ். எம். சுப்பையா இரசபல்லிச்சால் சௌந்தர பாண்டியன் மன்றச் செயலாளர் து. பாண்டியன், சத்தியவாணி முத்து மன்றச் செயலாளர் பி.ஏ. அந்தோணி, தாராவி கிளை கழக முன்னாள் அவைத் தலைவர் பி. எஸ். செல்லையா, பம்பாய் மத்திய கழகச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் ஆகியோர் தோழர் கி. வள்ளுவன் அவர்கள் பணியைப் பாராட்டிப் பேசினர்.

தோழர் கி. வள்ளுவன் அவர்களுக்கு தாராவி தி.மு.க. அபுபக்கர் சால் அண்ணா படிப்பகம், டாக்டர் சத்தியவாணிமுத்து மன்றம், கல்யாணிவாடி அண்ணா நினைவு மன்றம், சௌந்திரப்பாண்டியனார் பகுத்தறிவு மன்றம் ஆகியவைகளின் சார்பில் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து தோழர் வள்ளுவன், தற்போதைய கழக நிலையையும் -- கட்டுப்பாட்டையும் -- கழகத்திலிருந்து சொந்த விருப்பு வெறுப்புகளுக்காகப் பிரிந்தவர்களின் நிலையையும் விளக்கிப் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் பொருளாளர் பெ. சு. கலைச்செல்வன் நன்றி நவின்றார்.

கடலூரில் நடந்தது என்ன?

## மனுத் தர வந்தவரிடம் பதில் மனு கொடுத்தார் எம்.எல்.ஏ.

### படித்துப் பார்த்ததும் மனுவைப் போட்டுவிட்டு ஊர்வலத்தினர் ஓட்டம்!

கடலூர், நவ. 27—

கடலூர் சட்டமன்ற தி. மு. கழக உறுப்பினர் பாபு கோவிந்தராசன் வீட்டுக்கு எம். ஜி. ஆர். கட்சியினர் நேற்று காலையில் ஊர்வலமாகச் சென்றனர்.

வீட்டுக்கு சற்று தூரத்தில் ஊர்வலத்தினர் நின்று கொண்டனர்; எம். ஜி. ஆர். கட்சியைச் சேர்ந்த 6 பேர் மட்டும் அவருடைய வீட்டுக்குச் சென்றனர்.

அவர்களைப் பாபு கோவிந்தராசன் இன்முகத்துடன் வரவேற்றார்.

ஊர்வலம் வந்தவர்கள் அவரிடம் ஒரு மனுவைக் கொடுத்தனர்; அதை அவர் படித்துப் பார்த்துவிட்டு 'நான் ஒரு கடிதம் தருகிறேன்; அதை உங்கள் தலைவரிடம் (எம். ஜி. ஆரிடம்) கொடுங்கள்' என்று கூறி, ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

அந்தக் கடிதத்தை அவர்கள் வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு அதை பாபு கோவிந்தராசனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டனர்.

உடனே பாபு கோவிந்தராசன், 'நீங்கள் என் கடிதத்தை வாங்க மறுப்பதால், நானும் உங்கள் மனுவை ஏற்க மறுக்கிறேன்' என்று கூறினார்.

ஊர்வலத்தினர், அந்த மனுவை கதவில் போட்டு, எம்.எல்.ஏ. வீட்டு வாயிலில் வைத்துவிட்டுத் திரும்பிச் சென்றனர்.

பிறகு ஊர்வலம் கடலூர் புதுநகர் விளையாட்டு மைதானம்வரை சென்று கலைந்தது.

பாபு கோவிந்தராசன் ஊர்வலம் வந்தவர்களிடம் கொடுத்த கடிதத்தில் கூறப்பட்டிருந்தாவது:—

"1971—ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் உதய சூரியன் சின்னத்தில் நின்று -- மக்கள் நம்பிக்கையை பெருவாரியான வாக்குகளால் பெற்று பேரறிஞர் அண்ணாவின் அரசைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

மக்களின் கட்டளை என்னவென்றால், அவர்கள் எந்தக் கட்சிக்குப் பெருவாரியாக வாக்கு அளித்தனரோ அக்கட்சி அரசு நிர்வாகத்தில் இருக்க வேண்டும் என்பதாகும்; அக்கட்சியில் தொடர்ந்து அங்கம் வகிப்பவர்களே மக்கள் நம்பிக்கையை முழுமையாகப் பெற்றவர்கள் ஆவார்கள்.

ஆனால், தி. மு. க. சார்பில் வெற்றி பெற்ற சில சட்டமன்ற உறுப்பினர்கள், தி. மு. கழகத்திலிருந்து விலகிவிட்டதாகத் தெரிவித்திருக்கின்றனர்; தேர்தலில் எந்தக் கட்சியினர் சார்பில் இவர்கள் போட்டியிட்டார்களோ, அதே கட்சியில் நிலையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

எனவே, அக்கட்சியில் (தி மு க) இப்போது இல்லாதவர்கள், தம்முடைய விலகல் காரணங்களுக்குத் தொகுதி மக்களின் ஆதரவு உள்ளது என்பதை நிரூபிக்க தமது பதவியை இராஜினாமா செய்து -- பின்னர் நடைபெறும் தேர்தலில் தொகுதி மக்களின் நம்பிக்கையைப் பெற்று-- மக்களாட்சி மரபைக் காப்பாற்றத் தாங்களே முன்மாதிரியாக நடந்து கொள்வார்களானால், நானும் உங்கள் தலைவர் ஆணைப்படி -- அவர் கருத்தைக் கூற வந்துள்ள உங்களின் இன்றையச் செயலைச் சிந்திப்பதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்தவர்களாவீர்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

இதில் கண்டுள்ள கருத்தை உங்கள் தலைவருக்கு அனுப்பி வைத்து, தமிழ்நாட்டு அரசியலில் கருத்துக்கு கருத்து -- சொல்லுக்குச் சொல் என்ற அரசியல் பண்பாடு வளர துணை நிற்பீர்கள் என்று நம்புகிறேன்."

## அண்ணா பெயரில் கிராமம்

### நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியம் முடிவு

நெல்லிக்குப்பம், நவ. 27—

நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத் தலைமையகம், கீழ்க்கலரப்பட்டு ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட பெயரிடப்படாத ஒரு குக்கிராமத்தில் உள்ளது; அந்தக் கிராமத்துக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை இடுமாறு நலகாலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்திருக்கிறது. நேற்று நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியக் கூட்டம், ஒன்றியத் தலைவர் வி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கூடியபோது, அந்தக் கிராமத்து மக்களின் கோரிக்கையை ஏற்று 'அண்ணா கிராமம்' என்று பெயர் சூட்டத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரையே, 'அண்ணா கிராம ஊராட்சி ஒன்றியம்' என்று மாற்றியமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ரூ. 2,27,000 மதிப்பீட்டில் திருமண மண்டபம் ஒன்று கட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தலைமைக் கழக அறிவிப்பு

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

1—10—71 முதல் தலைமைக் கழகத்தினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு -- கழகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ள கோவில்பட்டித் தோழர்களான கலைமணி எஸ். எச். காசி (கழகப் பொதுக்குழு உறுப்பினர்-நெல்லை மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர்), செ. காசிமாரியப்பன் ஆகியோர் தங்கள் செயல்களுக்காக வருந்தியும் -- கழகத்தில் தொடர்ந்து பணியாற்ற அனுமதி அளிக்குமாறு கேட்டும் தலைமைக் கழகத்திற்கு விடுத்த வேண்டுகோளுக்கு ஏற்பவும், அவைகள் குறித்து மேல் அமைப்புகள் தலைமைக் கழகத்திற்குச் செய்துள்ள பரிந்துரைகளையொட்டியும் மேற்குறிப்பிட்ட இருவர் பேரிலும் எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை இன்று முதல் ரத்து செய்யப்படுவதுடன், இருவரும் 1-10-71 அன்று வகித்துவந்த கழக பொறுப்புகளிலேயே தொடர்ந்து பதவி வகித்துப் பணியாற்றுவதற்கும் இதன் மூலம் அனுமதி அளிக்கப்படுகிறது.

'அறிவகம்'
சென்னை-13
27-12-1972

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி.மு.க.

## ஆந்திரக் கிளர்ச்சி

விஜயவாடா, நவ. 27—

முல்கி விதிகளை எதிர்த்து நடக்கும் கிளர்ச்சியின் விளைவாக விஜயவாடா -- சென்னை இரயில் பாதையில் உள்ள 5 இரயில்வே நிலையங்களில் மட்டும் ரூ. 1 கோடி மதிப்புள்ள இரயில்வேச் சொத்துக்கள் நாசமடைந்துள்ளன.

இந்த 5 இரயில் நிலையங்களில் சிராளா இரயில் நிலையம்தான் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது; ரூ. 36 இலட்சம் மதிப்புள்ள டீசல இரயில் எஞ்சின் -- 18 வாகன்கள் கொளுத்தப்பட்டன; மூன்று வாகன்கள் சூறையாடப்பட்டன; எரிக்கப்பட்ட 18 வாகன்களில் வெள்ளைக் காகிதம்--தையல் இயந்திரங்கள் -- ரேடியோக்கள் -- டிரான்சிஸ்டர்கள் -- சிமெண்டு -- குடைகள் மற்றும் பல பண்டங்கள் இருந்தன; சிராளாவில் கூட்ஸ் நிலையமும் சூறையாடப்பட்டது.

சபாநாயகர் மதியழகனுக்கு 'சுயராஜ்யா' ஏடு அறிவுரை

# 'விவேகத்தைத் தவறுகப் பயன்படுத்தினர்'

## 'முதலமைச்சருக்கு ஆலோசனை கூறுவது அவரது வேலையல்ல'

### 'தாமாகவே பதவி விலக மறுப்பது பரிதாபத்துக்குரியது'

### 'அர்த்தமற்ற வாதம் கூடாது -- நடைமுறைகளைக் கண்டிப்பாக அனுசரிக்க வேண்டும்'

"தொடர்ந்து மதியழகன் சபாநாயகர் பதவியை வகிப்பதற்குத் தங்கள் எதிர்ப்பை மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பிரகடனப்படுத்தியிருப்பதால், அவர், தாமாகவே பதவி விலக மறுப்பது பரிதாபத்துக்குரியதாகும்.

"தம்மைப் பதவியிலிருந்து இறக்கக் கோரும் தீர்மானம் ஒன்று இன்னமும் தீர்வு காணப்படாமல் இருக்கின்ற நிலையில், தாம் பதவியை இராஜினாமாச் செய்யக்கூடாது என்று அவர் கூறும் வாதம் அர்த்தமற்றதாகும்.

"கண்ணியமும் கட்டுப்பாடும் அரசுக்கு எப்படித் தேவையானதோ -- அதேமாதிரி எதிர்க் கட்சிகளுக்கும் தேவையானது; சபாநாயகர் உட்பட எல்லா உறுப்பினர்களும் சனநாயக சம்பிரதாயத்தையும் நடைமுறை விதிகளையும் கண்டிப்பாக அனுசரிக்க வேண்டும்"

என்ற 'சுயராஜ்யா' ஏட்டின் 26—11—72-ம் நாள் இதழில், 'ஆசிரியர் குறிப்புகள்' என்ற பகுதியில் சுட்டிக்காட்டிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அப்பகுதியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"நவம்பர் 13-ந் தேதியன்று, தனது மாரிகாலக் கூட்டத் தொடரைத் துவக்கிய தமிழகச் சட்டமன்றம், குழப்பம் காரணமாக எந்த அலுவலிலும் ஈடுபடாமல் -- ஆரம்ப நாளன்றே ஒத்தி வைக்கப்பட்டது மிகவும் வருந்துவதற்குரியதாகும்.

சட்டமன்றங்கள் ஒழுங்காகச் செயல்படுவது சனநாயகத்தின் அடிப்படை; அவை அவ்வாறு செயல்பட முடியாமல் தடங்கல் செய்யும் ஒவ்வொரு செயலும் சனநாயகத்துக்கு விரோதமானது.

எதிர்க் கட்சிகள் மதிப்பு வாய்ந்த வாய்ப்பு ஒன்றைத்தான் இந்த ஒத்திவைப்புக் காரணமாக இழந்துவிட்டன; எனவே, பாதிக்கப்பட்டிருப்பது அமைச்சரவை என்று எண்ணுவது சரியல்ல!

துவக்க நாளிலேயே புதுக் கட்சிப் பிரிவின் தலைவரான எம்.ஜி. இராமச்சந்திரன், நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து -- தாம் குடியரசுத் தலைவரிடம் கொடுத்த புகார் மனுவில் அடங்கியிருப்பதான எல்லாப் புகார்களையும் சட்டமன்றத்திலும் வலியுறுத்தியிருந்தால் -- அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டிருக்கும் என்றாலுங்கூட -- அவர் தமது கட்சிக்கு மதிப்புள்ள துவக்கம் ஒன்றை அளித்ததாகவேனும் இருக்கும்.

இந்தக் குழப்பத்துக்குத் தன் பங்கைச் சபாநாயகர் செலுத்தியதும் -- மன்றக் கூட்டத்தை மூன்று வார காலத்துக்கும் அதிகமாக ஒத்திவைக்கத் தமது விவேகத்தைத் தப்பாகப் பயன்படுத்தியதும் கெட்ட வாய்ப்பான காரியங்களே!

சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மக்களிடம் போய் மறுதேர்தல் கோரும்படி முதல்வருக்கு ஆலோசனை கூறுவது அவரது வேலை அல்ல!

'கட்சியின் நண்பன்' என்ற முறையிலும், 'முதல்வரின் நண்பன்' என்ற முறையிலும் நாம் இப்படிக் கூறியதாக அவர் சொன்னார்; ஆனால், அப்படிச் சொன்னதை அவர் தனியான இடத்தில் சொல்லியிருக்கலாம்; சட்டசபைக் கூட்டத்தில் அல்ல!

மேலும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், சபாநாயகரைப் பதவியிலிருந்து இறக்கக் கோரும் தீர்மானத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஒழுங்கு நிலை ஏற்படுவதற்காகச் சட்டமன்றத்தை ஒரு நாளோ -- இரண்டு நாளோ ஒத்திவைத்திருக்கலாம்; ஆனால் 23 நாட்களுக்கு மன்றத்தை ஒத்திவைத்திருப்பது, மன்றத்தின் பெரும்பான்மையை உறுப்பினர்கள் விரும்பியிருந்தால் மட்டுமே நியாயமானதாகும்.

ஒத்திவைப்பின் விளைவாக ஏற்படும் பிரயாணப்படி -- தினசரி படி போன்ற இனங்களில் ஏற்படும் கூடுதல் செலவைக் கொடுப்பவர்கள் மக்கள்தானே?

சட்டமன்றக் கூட்டத் தொடரைக் கலைக்கவும் -- மன்றத்தின் முன்னுள்ள அலுவலைச் செய்து முடிக்க வேண்டுமென்ற கட்டளையுடன் மீண்டும் மன்றத்தை உடனடியாகக் கூட்டவும், அரசியல் சட்டப்படி ஆளுநர் அதிகாரம் பெற்றவராவார்.

கூட்டத் தொடரைக் கலைத்ததன் விளைவாகச் சபாநாயகரைப் பதவியிலிருந்து விலக்கக் கோரும் தீர்மானத்துக்குப் புதிய தாக்கீது கொடுக்கப்பட வேண்டியதிருந்தாலும் -- அதன் பரிசீலனை 14 நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட வேண்டியதிருந்தாலும், எந்தக் கேடும் விளைந்து விடப் போவதில்லை."

## திருவரங்கம் தி. மு. க.

### பொது உறுப்பினர்கள் கூட்ட முடிவுகள்

திருவரங்க நகர தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் 12—11—72 அன்று திரு. ப. இராமையா தலைமையில் நடைபெற்றது; அதுபோது நகரச் செயலாளர் எஸ். எம். வி. சாமி, தீர்மானங்களைக் கொண்டு வந்து விளக்கவுரையாற்றினார்; தீர்மானங்களாவன:—

திண்டுக்கல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் இராசாங்கம் மறைவுக்கு வருந்துவதுடன் அண்ணாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை நகர தி.மு. கழகம் தெரிவித்துக்கொள்கிறது.

கழகக் கட்டுப்பாட்டை மீறியதற்காக எம் ஜி.ஆர். மீது தலைமை பொதுக் குழுவும்--செயற் குழுவும் எடுத்த நடவடிக்கையை திருவரங்க நகர தி. மு. கழகம் ஒருமனதாக ஏற்றுக் கொள்கிறது.

எம். ஜி. ஆர். தொடங்கியிருக்கின்ற புதிய கட்சிக்கு அண்ணா பெயரையும், எம். ஜி. ஆர். கட்சிக் கொடியில் அண்ணா உருவத்தையும் பயன்படுத்துவதையும் நகர தி. மு. கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

## மதுரையில் நடந்த வன்செயல்கள்

### ரூ. 10 இலட்சத்திற்குமேல் சேதம் என மதிப்பீடு

மதுரை, நவ. 27—

"கடந்த வெள்ளியன்று மதுரை நகரில் நடைபெற்ற வன்செயல்களினால், அரசு -- தனியார் சொத்துக்களுக்கு ரூ. 10 இலட்சம் சேதம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகிறது'

என்று, மதுரை அர்பன் போலீசு சூப்பிரண்டெண்டு, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## நான்கு திட்டங்களுக்கு ரூ. 150 கோடி

### உலக பாங்கி வழங்கும்

புதுடில்லி, நவ. 27—

நான்கு புதிய திட்டங்களுக்காக இந்தியாவுக்கு 20 கோடி டாலர் -- அதாவது ரூ. 150 கோடி கடனுதவி அளிப்பது பற்றி உலக பாங்கி குழு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இந்தத்திட்டங்களுக்கான பேச்சுவார்த்தை அடுத்த பிப்ரவரிக்குள் முடிவடையக் கூடும்.

## குல்லா போட்ட நவாபு...

"நான்தான் தமிழகம்--தமிழகம்தான் நான்! நான் சொல்லிவிட்டால்......இவர்கள் சட்ட சபையைக் கலைத்துவிடுவதுதானே சனநாயகம்?"

**இதுதான், 'குல்லா போட்ட நவாபி'ன் இன்றையக் கூப்பாடு!**

**அதற்காக அவர் வாக்காளர் பெயரில் நடத்திக்காட்டிய ஜீரணிக்க இயலாத பேரணியை நேற்று தமிழக மக்கள் பார்த்தனர் -- பரிதாபப்பட்டனர்!**

**கலைஞரை -- கழகத்தை -- கழக அரசைப் பழி வாங்குவதொன்றையே அவர் தனது இலட்சியமாக -- குறிக்கோளாக-- ஏன் -- கொள்கையாகவே கொண்டிருக்கிறார்! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! பழிவாங்கிய நிறைவு தனக்கு -- வரிபாக்கி விவகாரத்தில் கவிகை யளித்ததற்காகக் காணிக்கை இந்திராவுக்கு!**

**இதனைத் தெளிவாகவே புரிந்து வைத்துள்ளனர் புத்திசாலிகளான தமிழ் மக்கள்!**

**நாளுக்கு நாள் தாம் ஒரு செலிச்சூரியவராசி வருவதை அவர் புரிந்து கொள்ளவில்லையே!**

**தெருவிலே போகும் சிறுவன்கூட பாட ஆரம்பித்துவிட்டான்-- 'குல்லா போட்ட நவாபு -- செல்லாது உங்க ஜவாபு' என்று!**

# 'தூய தமிழ் ஆட்சியைக் காப்போம்'

## தலைமைச் செயலக முத்தமிழ் மன்றத் தீர்மானம்

சென்னை, நவ 28—

சென்னை கோட்டையில் உள்ள தலைமைச் செயலக முத்தமிழ் மன்றக் கூட்டம் 23—11—72-ல் மன்றத் தலைவர் திரு. கோ. முத்துப்பிள்ளை தலைமையில், நடைபெற்றது; அவ்வமயம், கீழ்க்கண்ட தீர்மானம் தலைவரால் முன்மொழியப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தை ஆதரித்துத் திருவாளர்கள் சம்பந்தம், ரகீம், அருமைநாதன், கண்ணப்பா, இராமசாமி, குத்தூஸ், மோகனவேலு, கண்ணப்பன், இராசு, கோபால், சுப்பராயன், ஷேக் தாவூத், ஜமால் முகம்மது, இராமச்சந்திரன் ஆகியோர் பேசினர்.

"இன்று தமிழகத்தில் நடப்பது, தமிழர்களால்--தமிழர்களுக்காக நடத்தப்படும் தமிழர்களின் ஆட்சி என்பதை இம்மன்றம் தெளிவாக உணர்ந்துள்ளது.

மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணாவின் தலைமையிலும்— அண்ணாவின் மறைவுக்குப் பின் டாக்டர் கலைஞர் தலைமையிலும் அமைந்து நடைபெற்று வரும் ஆட்சி, தமிழ்ச் சமுதாயத்தை— தமிழினத்தை வாழ்விக்க வைக்கும் சீரிய திட்டங்கள் பலவற்றை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது; தமிழ் வளர்ச்சிப் பணிகள் ஆக்க முறையிலே விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

பிறந்து வளர்ந்த பொன்னாட்டிற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டித் தமிழ் மக்களின் நெஞ்சங்களெல்லாம் பூரிப்படையச் செய்தது இந்த அரசு!

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு கண்ட அரசு இது!

தமிழ் அறிஞர்களுக்குச் சிலை வைத்தும் பெருமைப்படுத்தியது இந்த அரசு!

'எங்கும் தமிழ் -- எதிலும் தமிழ்' என்ற நிலையில் எங்கெங்கும் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்த ஆட்சி இந்த ஆட்சி!

பிராந்தியச் செய்திகளை, 'மாநிலச் செய்திகள்' என மாற்றியமைக்கப் பாடுபட்டது!

வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவப் படத்தை அரசு அலுவலகங்களில் அமைக்க ஆணை பிறப்பித்தது இந்த அரசு!

தமிழ்ப் புலவர்களுக்கு உதவித் தொகை அளித்து அவர்கள் வாழ்வு வளம் பெற உதவியது!

கவி அரங்குகள்-- கருத்தரங்குகள் அமைத்து நாடெங்கும் தமிழ் மணம் கமழச் செய்தது இந்த அரசு!

தமிழ்ச் சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து உழலும் ஏழை எளிய -- பாமர மக்களின் வாழ்விலே ஏற்றம் காண்பதைக் குறிக்கோளாகக்கொண்டு பாடுபடும் இந்த அரசுக்குத் தாய்மொழியான தமிழ் மொழியில் ஏற்றத்திற்குப் பாடுபடும் தூய தமிழ் ஆட்சியாகிய இவ்வரசுக்குத் தலைமைச்செயலக முத்தமிழ் மன்றம் தன் முழு ஆதரவைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறது."

வாசகர் மடல்

## செய்வாரா சி. சு.?

ஐயா,

மாண்புமிகு மத்திய தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கட்கு வணக்கம்!

தாங்கள் தியாகராயநகர் பொதுக்கூட்டம் ஒன்றில்,

"சட்டப்பேரவைத் தலைவர் மதியழகன் சட்டமன்றத்தில் தெரிவித்த யோசனைக்கிணங்க, இப்போதைய அரசு பதவியிலிருந்து, விலகிப் பொதுமக்களின் ஆதரவு தனக்கிருக்கிறதா எனக் கண்டறிய, மறு தேர்தல் நடத்த முன்வருவது உசிதமாயிருக்கும்"

எனக் கூறியதாக 21—11—72-ல், சில நாளிதழ்களில் செய்தி வெளியாகியுள்ளது கண்டு ஆச்சரியம் அடைந்தேன்.

தாங்கள் இப்படி அடிக்கடி தமிழ்நாட்டு அரசியலில் 'தமாஷ்' செய்வது வியப்பாக உள்ளது.

ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்கள் மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்றிட வேண்டும் என்பதற்குத்தான் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுத்தேர்தல் நடைபெறுவதாகும்.

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மகத்தான மெஜாரிட்டி பெற்றுள்ள டாக்டர் கலைஞர் அமைச்சரவையை, தாங்கள் ஐபப்பாட்டிற்குரிய ஒன்றாக ஆக்க முயலுவதன் நோக்கம்தான் என்ன?

மெஜாரிட்டி சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சபாநாயகர், அதே மெஜாரிட்டி உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட பின்பு -- நம்பிக்கைக்குரிய அமைச்சரவைக்கு ஆலோசனை கூறும் தகுதியை எங்கிருந்து பெற்றார் எனத் தாங்கள் ஏன் சிந்திக்கவில்லை?

கலைஞரின் அமைச்சரவைக்கு மக்களின் மகத்தான ஆதரவு உள்ளதென்பதற்குத் தாங்களே ஓர் அளவுகோலாகக் கிருஷ்ணகிரியில் இருந்திருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

தங்களின் கட்சி ஆட்சி நடத்துகின்ற பிற மாநிலங்களில் நடைபெற்றுள்ள துப்பாக்கிச் சூடுகள்-- கலவரங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டும், 1971 பொதுத் தேர்தலுக்குப்பின் மாநிலங்கட்கும் -- நாடாளுமன்றத்திற்கும் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் தங்கள் கட்சி படுதோல்வி அடைந்துள்ள காரணத்தாலும்—

"இந்திராவின் அரசு மக்களின் ஆதரவு தனக்கு இருக்கிறதா எனக் கண்டறிய நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, மறு தேர்தல் நடத்த ஆலோசனை கூறுகிறேன்"

என நாடாளுமன்றச் சபாநாயகர் ஆலோசனை கூறினால், அதைத் தாங்களும் -- தங்கள் தலைவர்களும் ஏற்றுக்கொள்ளத் தயாரா?

மாநில சுயாட்சிக் கோரிக்கையின் சமயமாக வைத்து -- டாக்டர் கலைஞரின் பூரண ஆதரவைப் பெற்றுக் கிருஷ்ணகிரி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தாங்கள், மாநில சுயாட்சிக் கோரிக்கையினைப் புறக்கணித்ததன் மூலம் அத்தொகுதி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதால் குறைந்தபட்சம், தங்களின் பதவியையாவது இராஜினாமாச் செய்து மீண்டும் கிருஷ்ணகிரி மக்களிடம், போட்டியிடத் தயாரா என அறிய விரும்புகின்றேன்.

—இரா. வெற்றிகொண்டான்
செயங்கொண்டசோழபுரம்.

# 'கட்சி மாறிய எம்.எல்.ஏ. வீட்டுக்கு ஊர்வலம் செல்ல வேண்டாம்'

## பொதுச்செயலாளர் நாவலர் அறிக்கை

சென்னை, நவ. 28—

"எம். ஜி. ஆர். கட்சியில் சேர்ந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களையும்—வலது கம்யூனிஸ்டுக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் இராஜினாமா செய்யக் கோரி தி. மு. கழகத்தினர் ஊர்வலம் நடத்த வேண்டாம்"

என்று கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்; இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :—

"சில ஊர்களில் கழகத் தோழர்கள் தி. மு. கழகத்திலிருந்து பிரிந்து வேறு கட்சியில் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும்—வலது கம்யூனிஸ்டுக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் பதவியிலிருந்து இராஜினாமா செய்யவேண்டும் என்று கோரி ஊர்வலம் செல்லத் திட்டமிட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் கண்டேன்.

"அத்தகைய முறைகள் எதுவும் இப்போது கையாளத் தேவையில்லை என்று கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

### தாயில்பட்டி தி. மு. க.

தாயில்பட்டி தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் 19—11—72 அன்று அவைத் தலைவர் மா. கோவில் பிள்ளை தலைமையில் நடைபெற்றது; அதுபோது திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராசாங்கம்—தாயில்பட்டி கழகச் செயற்குழு உறுப்பினர் எஸ். நடராசன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

வரவு—செலவுக் கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

தமிழர் திருநாளை மிகச் சிறப்பாக கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

### நந்தினி சத்பதி வெற்றி பெற்றார்

#### முதலமைச்சர் பதவி நீடிக்குமா ?

கட்டாக், நவ. 27—

ஒரிசா முதலமைச்சர் திருமதி நந்தினி சத்பதி, கட்டாக் நகரத் தொகுதியிலிருந்து ஒரிசா சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முன்னாள் முதலமைச்சரும் உத்கல் காங்கிரசைச் சேர்ந்தவருமான பிரேன் மித்திராவைவிட இவர் 10,791 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றிருக்கிறார்.

இந்த இடைத்தேர்தலில் மொத்தம் ஐந்து பேர் போட்டியிட்டனர்.

நந்தினியை வலது கம்யூனிஸ்டுக் கட்சியினர் மட்டுமே ஆதரித்தனர்; மற்ற எதிர்க் கட்சிகளெல்லாம் எதிர்த்தன.

பெரும் சோதனையான இந்தத் தேர்தலில் இவர் வெற்றி பெற்றுவிட்டபோதிலும், முதலமைச்சர் பதவியில் இவர் தொடர்ந்து நீடிப்பது கடினம் என்றே தோன்றுகிறது.

திருமதி நந்தினிமீது 50 சட்டமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கை இல்லை என்று இந்திரா காங்கிரசுத் தலைமைக்கு ஏற்கனவே கடிதம் எழுதியிருப்பது நினைவு கூரத்தக்கது.

வாக்கு விவரம் :—

| | |
|---|---|
| நந்தினி சத்பதி | 28,283 |
| பிரேன் மித்திரா | 17,492 |
| பிரதீஷ் சவுத்திரி | 630 |
| சைலாபாலா பட்நாயக் | 277 |
| இஸ்லாமுத்தீன் | 148 |

பேச்சாளர் முகவரி :

இரா. வெற்றிகொண்டான்,
கலைஞர் இல்லம்,
செயங்கொண்டசோழபுரம்,
திருச்சி மாவட்டம்.

### வீராணம் குடிநீர்த் திட்டம்

#### 1974-ல் முடிவடையும்

சென்னை, நவ. 28—

வீராணம் குடிநீர்த் திட்டம் 1974-ம் ஆண்டு இறுதியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 21 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 4.50 கோடி காலன் காவிரி நீர் சென்னையில் நாள்தோறும் கிடைக்கும்.

இன்னும் இரண்டொரு மாதங்களில் இரண்டாவது சிமெண்டுக் குழாய் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கும். அதன் பிறகு தான் வீராணம் திட்டப் பணியில் வேகம் பிறக்கும்.

இப்போது மங்களத்திலுள்ள முதல் சிமெண்டுக் குழாய் தொழிற்சாலையில் 66 அங்குலம் விட்டம் உள்ள ஆறு மீட்டர் நீளக் குழாய்கள் நாள்தோறும் 16 மட்டுமே தான் உற்பத்தியாகிறது; பண்ணுருட்டியில் அமையும் இரண்டாவது தொழிற்சாலையில் 16 குழாய்கள் நாள்தோறும் உற்பத்தியாகும்; அதாவது, நாளொன்றுக்கு மொத்தம் 192 மீட்டர் நீளமுள்ள குழாய் தான் செய்யப்படும்.

இறக்குமதி லைசென்சு பெறுவதிலுள்ள சங்கடங்களினால் குழாய் உற்பத்தி சில மாதங்களுக்கு முன்புதான் ஆரம்பமாகியது; குழாய் வேயும் பணி ஆரம்பித்து நடந்துகொண்டிருக்கிறது.

குழாய் இணைப்புப் பணிதான் அதிகம் உள்ளது; இப்போதைய மதிப்புப்படி இதற்கு ரூ. 16 கோடிக்குமேல் செலவாகக் கூடும்.

### ஆளுநர்மீது கே.ஏ. மதியழகன் தொடர்ந்த வழக்கு

#### உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்து வாதம்

சென்னை, நவ. 28—

தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தின் முந்தைய கூட்டத் தொடர் முடிவுற்று விட்டதாக ஆளுநர் பிறப்பித்த உத்தரவு செல்லாது—அந்த உத்தரவை ரத்து செய்துவிட வேண்டும் என்று கோரி சபாநாயகர் கே. ஏ. மதியழகன்—எம். ஜி. இராமச்சந்திரன்—கே.டி.கே. தங்கமணி எம். எல். ஏ. ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 'ரிட்' மனுக்களின் விசாரணை நேற்று தொடங்கியது.

தலைமை நீதிபதி கே. வீராசாமி—நீதிபதிகள் இராமப்பிரசாத ராவ், ஜே. ஆர். பால் ஆகியோர் கொண்ட முழு பெஞ்சின்முன் விசாரணை வந்தது.

அரசுத் தரப்பில் அட்வகேட்—ஜெனரல் எஸ். கோவிந்தசாமிநாதன்—அரசு வழக்குரைஞர் எஸ். மோகன் ஆகியோரும், ஆளுநர் தரப்பில் எம். கே. நம்பியாரும் ஆஜராயினர்.

மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் வி. பி. இராமன் ஆஜராகி—தமது கட்சியை எடுத்துரைத்தார்; 'ஆறு காரணங்களினால் ஆளுநர் உத்தரவு செல்லாது' என்று கூறி அதுபற்றி விவரித்து விவாதத்தைத் தொடங்கினார்; அவரது விவாதம் முடியவில்லை; இன்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### இந்தியாவுக்குக் கனடா புதிய கடனுதவி

புதுடில்லி, நவ. 28—

இந்தியாவுக்குக் கனடா ரூ. 1.33 கோடி கடனுதவி அளிப்பதற்கான ஒப்பந்தம் புதுடில்லியில் கையெழுத்தாகியது; ஹால்தியா துறைமுகத்தில் உரத்தை இறக்கி ஏற்றுவதற்கான கருவிகள் வாங்குவதற்கு இது உதவி செய்யும்.

இதேபோல் கண்டலா துறைமுகத்திற்கும் உதவி செய்ய ஒரு ஒப்பந்தம் சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் கையெழுத்தாகியது.

இவை தவிர, பம்பாய்—சென்னை ஆகிய துறைமுகங்களுக்கும் உதவி உதவ கனடா முன்வந்துள்ளது.

### சென்னையில் டெலிவிஷன்—1974-ல் செயல்படும்

புதுடில்லி, நவ. 28—

"சென்னையில் டெலிவிஷன் நிலையம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது; இது 1974-ம் ஆண்டு செயல்படத் துவங்கலாம்"

என்று மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், தகவல் ஒலிபரப்புத் துணையமைச்சர் தரம் பீர் சின்கா தெரிவித்தார்.

### 'நவசக்தி' படைக்கும் நகைச்சுவை விருந்து

"தேசபக்தர் வ. உ. சிதம்பரனார் ஓட்டிய கப்பல் 1973 மார்ச் மாத இறுதியில் சென்னைக்கு வருகிறது; பிறகு இது சிங்கப்பூர் – பினங்கு – கோலாலம்பூர் ஆகிய இடங்களுக்குச் செல்லும்."

என்ன சிரிக்கிறீர்கள்; மேலும் படியுங்கள் :—

"இதில் 163 முதல் வகுப்புப் பிரயாணிகளும் 1530 மற்ற வகுப்புப் பிரயாணிகளும் வசதியாகப் பயணம் செய்யலாம்."

ஆமாம்; இது உண்மையிலேயே வ. உ. சிதம்பரனார் அந்தக் காலத்தில் ஓட்டிய கப்பல்தான்; யாரும் சந்தேகப்பட வேண்டாம்; வேண்டுமானால், 'நவசக்தி' (சென்னை 28-11-72) இதழின் 4-ஆம் பக்கத்தில் பாருங்கள்.

தேசிய தினசரியான 'நவசக்தி' எப்போதும் உண்மைச் செய்தியைத்தான் வெளியிடும்! யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

### தவறான செய்தி தந்த 'தென்னகம்' மீது நடவடிக்கை

—★—

#### சிதம்பரம் நகராட்சி உறுப்பினர் அறிக்கை

"'தென்னகம்' பத்திரிகையில், நான் எம். ஜி. ஆர். கட்சியில் சேர்ந்துள்ளதாக எம். ஜி. ஆர். அறிவித்தார் என்ற செய்தி முற்றிலும் பொய்யானதும் தவறானதுமாகும்.

நான் என்றும் தி. மு. கழகத்தில் தான் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன்.

கலைஞர் தலைமைக்கும்—கழக அரசுக்கும் என்றும் உறுதுணையாக இருப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

என்மீது தவறான கருத்தை வெளியிட்ட 'தென்னகம்' மீதும்—எம். ஜி. ஆர். மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க இருக்கிறேன்"

என்று சிதம்பரம் நகராட்சி உறுப்பினர் ஆர். பாலகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

### சென்னை 2-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம் கலைப்பு

26—11—72 அன்று வண்ணைப் பகுதி தி. மு. க. துணைச் செயலாளர் ஏ. இராசகோபால் தலைமையிலும்—வட்டச் செயலாளர் கே. பி, பாண்டியன், மக்கள் முன்னேற்ற மன்றச் செயலாளர் ஜே. மணி முன்னிலையிலும் சென்னை 2-வது வட்ட மறுமலர்ச்சி எம். ஜி. ஆர். ரசிகர் மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம், கழகக் கட்டுப்பாட்டை மீறியும்—கழகக் கண்மணிகள்மீது பழி சுமத்தியும்—பேரறிஞர் அண்ணா கட்டிக்காத்த தாய்க் கழகத்தைக் காட்டிக் கொடுத்தும் துரோகச் செயலில் ஈடுபட்டுள்ள எம். ஜி. ஆர். பெயரில் இயங்கிவந்த இம்மன்றத்தைக் கலைப்பதெனவும், 'பேரறிஞர் அண்ணா நற்பணி மன்றம்' என்ற பெயரில இனி இயங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் திரு எம். பாலகிருட்டிணன் தற்காலிகப் பொறுப்பாளராக இருக்க வேண்டுமெனவும் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

### மான்கூர்டு ஜனதா காலனி எம். ஜி. ஆர். மன்றம் கலைப்பு

"பம்பாய்—செம்பூர் வட்ட மான்கூர்டு ஜனதா காலனி தி. மு. க. கிளையின சார்பு மன்றமாக இயங்கிவந்த எம். ஜி. ஆர். மன்றத்தைக் கலைத்துவிட்டுக் கிளைக் கழக அனுமதியுடன் மன்றச் செயற்குழுவில் ஒருமனதாக 'அறிஞர் அண்ணா நினைவு மன்றம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது" என்று மேற்படி மன்றச் செயலாளர் பா. சேக் மொய்தீன் அறிவிக்கிறார்.

### இராமேசுவரத்துக்குச் சாலைப் பாலம்

#### மக்களவையில் தகவல்

புதுடில்லி, நவ. 28—

"இராமேசுவரம் தீவைத் தமிழ் நாட்டுடன் இணைக்க இப்போது மண்டபத்துக்கும் — பாம்பனுக்கும் இடையே கடலில் இரயில் பாலம் உள்ளது; இதேபோல், சாலைப் பாலம் ஒன்று அமைக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

"இதற்கு ரூ 5.32 கோடி செலவாகும்; இந்தப் பாலம் கட்டுவதற்கான 'டெண்டர்'கள் கோரப்பட்டிருக்கின்றன; அது முடிவானதும் பாலம் கட்டும் வேலை தொடங்கிவிடும்"

என்ற தகவலை மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில், கப்பல் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் ஓம் மேத்தா தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... அச்சகத்தில் ... சென்னை ... வெளியிடப்படுகிறது.

### நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**29—11—72**

**தாரமங்கலம்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர் : டி. டி. வையாபுரி; பேசுவோர் : அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, செ. கந்தப்பன் எம்.எல்.ஏ., மு. பரமசிவம் எம்.எல்.ஏ., எஸ். செல்லத்துரை, அ. பாலு, டாக்டர் கே. ஆர். கோபால, டி. சி. அரங்கசாமி.

**30—11—72**

**திண்டுக்கல்**

9-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மெயின் ரோடில்; தலைவர் : ஓ. என். சிவஞானம்; பேசுவோர் : நன்னிலம் அ. நடராசன், பொ. அ. சீனிவாசன், க. வே. வடக்கர மாதித்தராசன், மு. காதர்சா, மா. தங்கவேலர், நாகராசன் எம்.எல்.ஏ., என். முத்து, து. இராமலிங்கம், இரா. முனியப்பன், எஸ். ஏ. இராசன், க. மைக்கேல், சோ. செல்லம் மற்றும் பலர்.

### உடையார்பாளையம் வட்டச் செயல் வீரர் கூட்டம்

"உடையார்பாளையம் வட்டத் தி. மு. கழகச் செயல் வீரர்கள்—கிளைக் கழகச் செயலாளர்கள்—மேல் அமைப்புப் பிரதிநிதிகள்—வட்டப் பிரதிநிதிகள் கூட்டம், 30-11-72 பிற்பகல் 2 மணியளவில், செயங்கொண்டம் பயணிகள் விடுதியில், வட்ட அவைத் தலைவர் ஆர். செயராமன் தலைமையிலும்—மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. சிவப்பெருமாள் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்; அதுபோது, கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்க இருப்பதால் அவசியம் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று வட்டச் செயலாளர் க.சொ. கணேசன் அறிவிக்கிறார்.

### முருகு பாண்டியன்

#### கலை நிகழ்ச்சிகள்

டிசம்பர் 1: திருக்கண்ணமங்கை; 2: பாபநாசம்; 3: கும்பகோணம்; 4: பட்டீச்சுவரம்; 5: அதிராம்பட்டினம்; 6: ஈரோடு; 7: லக்காபுரம்; 8: ஈரோடு; 10: சேலம்; 12: சன்னலிப்பட்டி; 13: திண்டுக்கல்; 14: நாகர்கோவில்; 16: நெய்வேலி-8; 17: தியாகதுருகம்; 18: கவுந்தப்பாடி; 19: பவானி; 21, 22, 23: கோவை வட்டம்; 26, 27, 28, 29: சென்னை-54.

### ஒத்திவைப்பு

"26—11—72 ல் நடைபெற இருந்த நீலகிரி தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க மாநாடு வேறொரு தேதிக்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது" என்று சங்கத் தலைவர் எம். மாணிக்கம் அறிவிக்கிறார்.